மாண்புமிகு திரு. டி. எம் செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 12–10

7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1993-94, அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993-94 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கை, மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1993-94 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள இத்துணை மதிப்பீடு, மொத்தம் ரூபாய் 123.36 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில் ரூபாய் 104.07 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 19.29 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் அடங்கும்.

2. வரவு–செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த பின்னர், அவசர செலவுகள் குறித்த சில இனங்களுக்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதி வழங்கப்பட வேண்டியிருந்தது. எதிர்பாராச் செலவு நிதியில் இத்தொகைகளை மீண்டும் ஈடு செய்வதற்காகவே முக்கியமாக இத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டப்பணிகள் குறித்து நான் சுருக்கமாக கூற விழைகிறேன்.

3. மதுரை, வ. வு. சிதம்பரனார், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு–அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களில் பட்டா விவரப் புத்தகம் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்த அனுமதித்துள்ளது. இதற்குச் சிறப்பு பணியாளர்களை அனுமதியளித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 1.73 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை ''மானிய கோரிக்கை எண். 11. மாவட்ட நிருவாகம்'' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

1993 அக்டோபர் 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

4. தமிழ்நாட்டில் சிறப்புப் பாதுகாப்புப் படை, சிறப்புப் பணிக்குழு ஆகியவற்றில் பணியாற்றுகின்ற காவல் துறைப் பணியாளர்களுக்கு சிறப்புச் சீருடைப்படி, பணிஇடர் ஏற்புப்படி, உயர்த்தப்பட்ட நாட்படி ஆகியவற்றுக்கு அரசு அனுமதியளித்துள்ளது. இதற்காக ரூ. 73.06 இலட்சம் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. 1989-ல் தமிழ்நாட்டில் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளுக்கான தேர்தல் நடைபெற்றபோது, குஜராத், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநில அரசுகள் தங்களுடைய ஊர்க் காவல் படைகளை அனுப்பியவகையில் ஏற்பட்ட செலவை நமது அரசு ஈடு செய்துள்ளது. இதற்காக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து வழங்கப்பட்ட ரூ. 42.80 இலட்சம் இத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. தருமபுரி மாவட்டம், பர்கூரில் மகளிருக்கான அரசினர் கலை-அறிவியல் கல்லூரி ஒன்றை அரசு புதிதாகத் தொடங்கியுள்ளது. அதற்காக மொத்தம் ரூ. 54.28 இலட்சம் அனுமதித்துள்ளது. இதில் கட்டிடச் செலவுத் தொகையும் அடங்கும். இதனை எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன் பணமாக வழங்கியுள்ளது. மானியக் கோரிக்கைகள் ''எண் 17-கல்வி'', மற்றும் ''55—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு'' ஆகியவற்றின் கீழ் துணை மதிப்பீடுகளில் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

7. இரசாயன உரங்களை சலுகை விலையில் விற்பனை செய்யும் பணி மத்திய அரசின் நிதியுதவியுடன் மொத்தம் ரூ. 31.63 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 15.82 கோடி வழங்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

8. கிராமப் பகுதிகளில் தொடங்கப்பட்ட நியாய விலைக் கடைகளுக்கு 1993-94 ஆம் ஆண்டு வரையிலான நிலுவைகளைத் தீர்வு செய்வதற்குத் தேவைப்பட்ட கூடுதல் தொகையான ரூ. 4.40 கோடி இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

9. 1993-94 ஆம் ஆண்டில் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு பயிற்சி (TRYSEM) அளிப்பதற்காக மத்திய அரசு நிதியுதவியுடன் மொத்தச் செலவு ரூ. 8.69 கோடியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு முதற்கண் ரூ. 4.82 கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது

10. ''டான்சி'' நிறுவனத்தை மாற்றி அமைக்கும் திட்டத்தை அரசு மேற்கொண்டுள்ளது. அதன்படி, அரசு, ''டான்சி'' நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட சில கடன்களையும், வழிவகை முன் பணங்களையும் மானியமாக மாற்றுவதென்று முடிவு செய்துள்ளது. இதன் பொருட்டு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 11.91 கோடி இத்துணை மதிப்பீடுகளில் சேர்ந்துள்ளது.

11. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுகின்ற, தமிழ் நாடு குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டத்திற்காக கடந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்ட வழிவகை முன் பணங்களை மானியமாக மாற்றுவதற்கு, தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்திற்கு, அரசு, மேலும் ரூ. 25 கோடி வழங்கியுள்ளது. துணை மதிப்பீடுகளில் இத்தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

12. தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதியுதவிக் கழகத்திற்கு முதலீடு செய்கின்ற பொதுமக்களிடமிருந்து அதிக அளவு வைப்பீடுகளைப் பெறுவதற்காக, அரசு, கூடுதலாக ரூ. 2 கோடி மூலதனப் பங்குத் தொகையை அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

13. வ. உ. சிதம்பரனார் மாவட்டம், தருவைக் குளத்தில் மீன் வளர்ப்புத் தொழிற்பேட்டை ஒன்று ரூ. 4.30 கோடி மொத்தச் செலவில் அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதற்காக தமிழ்நாடு மீன்வள வளர்ச்சிக் கழகத்திற்கு மூலதனப் பங்காக ரூ. 1.15 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையினை, கடன் உதவிகளை திரட்டுவதற்கான நிதி ஆதாரமாகக் கொள்ளப்படும். முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து இத்தொகை வழங்கப்பட்டு துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

14. இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து, இங்கு நான் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும், ஏனைய இனங்கள் குறித்தும் உரிய முழு விவரங்களும் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம் பெற்றுள்ளன. இவற்றுடன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

வணக்கம்.